DUPLICATE

# இந்துசாதனம்

புதினப்பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

விரோதிஞு (1889) ஆவணிமீ ௨௨ ௳ ஆரம்பமானது.

## THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

| | |
|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம்: ஞூ க்கு | ரூ. ௨-௨௫ |
| வெளியூர், இந்தியா: " | ரூ. ௩-௭௫ |
| தொடுவாய்ப்பகுதி: " | ரூ. ௩-௭௫ |
| தனிப்பிரதி சதம் | -௦௫ |

விளம்பர விகிதம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௭-௫௦ |
| " | அரைக்கலம் | ௪-௦௦ |
| " | கால்கலம் | ௨-௫௦ |
| " | ஒரு அங்குலம் | -௫௦ |

அடுத்தமுறைகட்கு டை விகிதங்களில் அரைவாசி.

புத்தகம் ௩௧ — யாழ்ப்பாணம்—சித்தார்த்தி ஞு ஆனிமீ ௧௯௨; ௧௯௧௯ ம் ஆடு ஜூலைமீ ௩௨. — இலக்கம்— ௧.

௨

கணபதி துணை.

சீர்பூத்த சருவிறு லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப்பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலெனமூன்று
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

### சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள்மாத்திரமல்ல ஏழைகளும இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்துவருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பிதாரு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீமுள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபாகபஸ்பம், வங்கபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருடைத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இறுத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரையிறுத்தலுக்கு ரூபா ௧௦. கால் இறுத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர், பினாங்கு முதலிய தொடுவாய் இராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணி ஓடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை, கொழும்பு.

இதுவரை வெளிவராத புதுமாதிரியான
பவுண்டன் பேனுக்கள்.

பாக்கிங் செலவுமில்லை தபால்சார்சு மில்லை.

மைதொடாமல் எழுதக்கூடியது. எமது சுவிஸ் மேட் பேனாவை வாங்கிப்பார்த்தால் வேறெந்தப் பேனாவும் வாங்கப் பிரியமிராது. பேனா 1-க்கு விலை ரூபா 1. டஜன் ரூபா 11. பிளாச் பர்ட் பவுண்டன் பேனா 1-க்கு ரூபா 3—12. சுவான் பேனா 1-க்கு ரூபா 7—4. வர்பர் மேன்ஸ் ஐடியல் பேனா 1-க்கு ரூபா 7—12. வேறெந்தப் பேனாவும் எங்களிடம் கிடைக்கும். விலை விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

வி: பி. மணி அண்டு கோ.,
10, வைத்தியநாதமுதலி தெரு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

கவனியுங்கள்.

நயம் திணுசுகள்-சொற்பலாபம்-விலை சகாயம்.

பேர்பெற்ற செட்டிச்சாய நூல்கம்பேனி எது?

மதுரை
மு. சு. ராமசாமிஐயர் கம்பேனியே.

ஐயா!

எங்கள் பேரில் பட்சமும் விசுவாசமுமுள்ள கனவான்களே, நமது கம்பேனியில் சொந்தப் பார்வையில் கைதேர்ந்த வேலைகாரர்களால் அலிஜரைன் என்ற பீபாசாயத்தில் உற்பத்தியா கிறகாட்டிச்சிகப்பு, செட்டிச்சாயநூல்களில் 10-ம் நம்பர் 16-ம் நம்பர் 20-ம் நம்பர் 22-ம் நம்பர் 24-ம் நம்பர் வரை. 1-ம் தரம் 2-ம் தரம் சாயங்களில், சுடர் அதாவது சுயவர்ணம் கால் கப்பு அரைக் கப்பு முழுக் கப்பு நிறங்களில் சாயந்தீர்ந்து 10 இறுத்தல் கட்டுகளும் டை கட்டு 18 அல்லது 24 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும். 26-ம் நம்பர் முதல் 40-ம் நம்பர் வரை சிகப்பு நூல் வேண்டியவர்களுக்கு ஆடரின் பேரில் தயார் செய்து அனுப்பப்படும்.

சீமை பென்னிகறுப்பு மாதிரி செட்டி கறுப்பு சாயத்தில் 10-ம நம்பர் முதல் 16×20×22××2430×40,ம் நம்பர்வரை சாயம் தயார் செய்து 5 இறுத்தல் கட்டுகளும் டை கட்டு 20 அல்லது 30 கட்டுகள் கொண்ட பேல்களும் பாக்கிங் செய்யப்படும்.

டை நூல்களின் விலை சகாயமாயும் இழைப்புக்கு சிதறில்லாமலுய நயமான நூல்கள் தயாராகின்றன. தேவையுள்ளவர்கள் 100-க்கு ரூபாய் 10—0—0 பத்து வீதம் அட்வான்சு அனுப்பி வி. பி. மூலமாய் ஆடர்செய்துகொள்ள வேண்டியது. டை பேல்களுக்கு பாக்கிங் செலவும் ரயில் சார்சும் பிரத்தியேகம். கம்பேனியாருக்கு பாத்தியமில்லை.

F. M. S. பெடரேரெட் மலாய நாடுகளில் இருப்பவர்கள் முன்பணம் அனுப்பி ஆடர்செய்ய வேண்டியது, சிங்கப்பூர் பினாங்கு என்ற இடங்களுக்கு வி. பி. போஸ்டு மூலமாய் அனுப்புவோம்.

நூல்விலை விபரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

எங்களுக்கு எழுதப்படும் ஒவ்வொரு லெட்டர்களிலும் தங்கள் விலாசம் தெளிவாகத் தெரியும்படி ஜில்லா தாலூகா போஸ்டு கிராமம் சமீப ரயில்வேஸ்டேஷன் கண்டெழுதியனுப்ப வேண்டியது. முக்கியமாய் தமிழில் லெட்டர்கள் எழுதியனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,
M. S. Ramaswamy Iyer,
Yarn Merchants,
Singara Topu Street,
Madura, S. INDIA.

PLEASE TRY ONE OF OUR SARIS.

விலை ரூபா 4-0 0. விலை ரூபா -4-0-0.

மதுரை மீனாட்சி அம்மன்
அழகிய புட்டாச் சேலை.



16 முளம் நீளம், $2\frac{1}{2}$ முழம் அகலம்; சாயத்திற்கு உத்தரவாதம்; தற்காலத்துக்குத்தகுந்த நாணயமான நல்லசேலை. இதிற் பலவித புட்டாக்கள் போட்ட, பல தரங்கள் உண்டு. ஒருமுறை வாங்கிக உண்மைபுலப்படும். ஒரேதடவையில் 4 சேலை வாங்குபவர்களுக்கு வி. பி. சார்ஜ் இனாம். சாம்பிள் அனுப்ப முடியாது.

பம்பாய் இமிடேஷன் பட்டுப் புடவை ரூபா 8-4-0. 8 கெஜம், 9 கெஜம் ரூபா 9.

நாகாபுரம் சரிகைச் சேலை ரூபா 7-8-0. கோகர்ஜான் பட்டுப் புடவை ரூபா 22-8 0. (சரக்கு 20 ரூபாவுக்கு மேற்பட்டால் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.)

சரஸ்வதிபாய் அண்டு கம்பேனி,
10, வைத்தியநாத முதலி தெரு,
சவுக்கார்பேட்டை,
மதராஸ்.



SRI RAMANA MAHARSHI.

தீனர்களை ரக்ஷிக்கும்பொருட்டுக் குருமூர்த்தமாகஎழுந்தருளி திருஅண்ணுமலையில்பிரஹ்மாகத்தஸ்வரூபராய் வீற்றிருக்கும் பிராஹ்மண பால்ய ஸந்யாஸி என்று வழங்கும்
ஸ்ரீ. ரமண மஹர்ஷி.

## காசிப் பட்டுப் பீதாம்பரங்கள்.

சுத்தமான பட்டு] சகாய விலைகள் [நாணயமான ஜரிகை
பிரியமில்லாததைத் திருப்பிப் பெற்றுக் கொள்ளுவோம்.

கீழே கண்ட பட்டுத்திணுசுகள் எல்லா நிறத்திலும் கிடைக்கும்.

பட்டுச்சேலைகள்:—16 முழம் நீளம் $2\frac{1}{4}$ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா விலை ரூபா 20முதல் 50 வரை. அதேமாதிரி சேலை உடலிலும் ஜரிகைப்பூ புட்டா போட்டது. ரூபா 20 முதல் 100 வரை.

ரவிக்கை:—விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலைகள் உடல் சாதா 2 ரூபா முதல் 8 வரை உடலிலும்; புட்டா ஜரிகை பூவேலைசெய்தது. ரூபா 3-முதல் 20 வரை.

துப்பாட்டாக்கள்:—6-முழம் $2\frac{1}{2}$- அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகை வேலை; உடல் சாதா ரூபா 8 முதல் 25 வரை. அதேமாதிரி உடலில் ஜரிகை வேலைகள் ரூபா 4 முதல் 55 வரை.

சவுக்கங்கள்:—$2\frac{1}{2}$ முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் சுற்றி ஜரிகை மூலையில் மாங்காய் ரூபா 6-8-0 முதல் 15 வரை. அதேமாதிரி உடலில் பூக்கள் போட்டது. ரூபா 9-முதல் 30-வரை.

வெண்பட்டு வேஷ்டிகள்:—6, 7, 8, 9-முழம் நீளம் $2\frac{1}{2}$, $2\frac{3}{4}$, 3-முழம் அகலம். சுத்த வெண்பட்டு கோயமுத்தூர் வேஷ்டிமாதிரி சிகப்பு சன்ன கம்பி போட்டது. விலை ரூபா $8\frac{1}{2}$-முதல் 20-வரை. அதேமாதிரி வேஷ்டிகள் சிகப்பு சன்ன கம்பிக்குப் பதிலாக ஜரிகையால் சன்னக் கம்பி போட்டது. ரூபா 12-முதல் 30-வரை.

டை சவுக்கங்கள் $2\frac{1}{2}\times 2\frac{1}{2}$-முதல் சிகப்புக் கம்பிக் கரை போட்டது. ரூபா 5-முதல் 8-வரை. ஜரிகைக்கம்பி போட்டது ரூபா 9-முதல் 15-வரை. டை வெண்பட்டு வேஷ்டிகள் ருத்திராட்சக் கரை போட்டதும் அதே விலைக்குக் கிடைக்கும்.

சுத்தமான கம்பிளி போர்வைகள்:—6-முழம் நீளம் 3-அகலம் எல்லா நிறத்திலும் ரூபா 5-8 முதல் 8-வரை.

உருத்திராக்ஷங்கள்:—6 முகம் 33 உள்ள மாலை அணு 8 முதல் ரூபா 5 வரை; 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16-முகம் தனி மணிகள் ரூபா 5 முதல் ரூபா 25 வரை; 108-கொண்ட ஜெபமாலை அணு ஆறு முதல் ரூபா 5 வரை.

வயிரவர் காசிக் கயிறு:—1-ம் கெ. 100-க்கு ரூபா 3. 2-ம் கெ. ரூபா 2-8-0, 3-ம் கெ. ரூபா 2. டை சிறிது 6-அணு. அதிலும் சிறிது 4-அணு.

பெண் குழந்தைகள் விளையாடும் பித்தளை பாத்திரங்கள் செட்டு:—பித்தளை, வெண்கலத்தால் செய்பு, குடம், கரண்டி முதலிய 27-சாமான்கள் அடங்கியது. சிறிது ரூபா 2. பெரிது ரூபா 4. நயம் கஸ்தூரி:—தோலா -க்கு ரூபா 35.

Silk Pitamber Co., Benares City.

விலாசம்:—மானேஜர், பட்டு பீதாம்பரக் கம்பெனி, காசி.

சகலவிதமான அச்சுவேலைகளும்
மிக அழகாகவும்
வெகு விரைவாகவும்
செய்துகொடுக்கப்படும்.
சைவப்பிரகாசயந்திரசாலை
"இந்துசாதன" ஆபீஸ்
வண்ணார்பண்ணை.

கொழும்பு தமிழ் ஹோட்டல்.
1910-ம் ஆண்டு தொடக்கம் நடைபெறுவது.)
பிரயாணிகள் வேண்டிய வசதிகளுடன்
தங்குமிடம்.
கப்பல் டிக்கற் எடுத்துக்கொடுக்கப்படும்.
95. Dam Street, Colombo

### தேவை.

அராலி சரசுவதி வித்தியாசாலைக்கு ஓர் பெண் உபாத்தியாயினி தேவை. சம்பளம் ரூபா-15. வட்டுக்கோட்டை தொக்தாரிஸ் அ. சிதம்பரநாதபிள்ளை அவர்களுக்கு ஆடி 30க்கு முன் கேள்விப் பத்திரம் அனுப்பவும்.

### அறிவித்தல்.

அச்சுவேலியைச்சேர்ந்த பத்தைமேனியிலிருக்கும் ஸ்ரீ. சதாசிவம் பெண் முத்தும்மாளாகியநான் எனது புருஷன் என்னைவிட்டு இப்போது பிரிந்திருக்கிறமையால் எனது சம்மதியின்றி அவர் என்னுடைய ஆதனங்களைவிற்க ஒதிகைக்ககூடாதென்றும், நானுமவருமாகச் சேர்ந்து ஓர் மணசாதன மெழுதினதேயன்றி வேறொருவகையான சாதனமாவது ரோட்டிப்பொறுப்பாவது செய்து கொள்ளவில்லையென்றும், நானும் எனது புருஷனும் சேர்ந்தெழுதிய மணசாதனம் இதுமுதல் பெலனற்றுவிட்டதெனவும்,இதனாற் சகலருக்கும் அறிவிக்கின்றேன். முத்தம்மா

### யாழ்ப்பாணம் சைவபரிபாலசபைத் தானவரவு.

அனுராசபுரத்தில் (Forest Ranger) வனபரிபாலனப் பகுதி உத்தியோகஸ்தராயிருக்கு வண்ணார்பண்ணை ஸ்ரீ சி. கார்த்திகேசு அவர்களின் வருஷாப்பியத்தில் மேற்படி சபைக்கு சுரித்தனுப்பிய ரூபா ஒன்று பெற்றும்.

சி. மு. ப. சிதம்பரநாதச்செட்டி,
தனாதிகாரி.

### பத்திரக்கிரய வரவு.

| ஸ்ரீ. | ரூ. ச. |
|---|---|
| S. K. K. சர்தவனம், பருத்தித்துறை | 3-75 |
| N. தம்பிராசா, சக்கப்பனை | 3-50 |
| வீ. நமசிவாயம், மீசாலை | -50 |


# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:—சித்தார்த்தி௵ ஆனிமீ ௩௧௨.


## உணவுப் பொருட்களின் நிலைமையும் தேசாதிபதியவர்களும்.

நமது தேசாதிபதி சேர் உவில்லியம் ஹென்றி மனிங் அவர்கள் சென்ற சுக்கிரவாரத்தன்று மாத்தறைக்குச் சென்று அங்கு நடைபெற்ற கிருஷிப் பொருட்காட்சியைத் தரிசித்தபின் அவருக்கு வாசிக்கப்பெற்ற உபசாரப் பத்திரத்திற்கு விடையளித்தபோது நமது தேசத்திலேயே நமக்கு வேண்டிய உணவுப் பொருட்களை விளைவித்துக்கொள்ளுதலின் அத்தியாவசியகத்தைக் குறித்து ஓர் சிறந்த உபந்நியாசஞ் செய்தனர். அவ்வுபந்நியாசத்திலே தாம் இவ்விலங்காதிபத்திலே காலவைத்தநாண்முதல் இத்தேசத்திற்கு வேண்டிய உணவுப்பொருட்களை இத்தேசத்திலேயே விளைவித்துக்கொள்ளுதலின் அத்தியாவசியகத்தைக் குறித்துத் தாம் வற்புறுத்திவந்திருக்கின்றாரென்றும், தாம் முதன்முதல் இதைக்குறித்துப் பேசியபோது பிறதேசங்களிலிருந்து உணவுப் பொருட்கள் நாடோறும் அதிகமாக வந்துகொண்டிருக்கும்போது அவற்றின் குறைவைக் குறித்துப் பேசுதல் அனாவசியகமென அநேகர் நினைத்தார்களென்றும், ஆனால் தக்க நியாயமின்றி தாம் அதைப் பற்றிப் பேசவில்லையென்றும், இந்தியாவிலே விளைவு மிகவுங் குறைந்துபோனமையால் உணவுப் பொருட்கள் அங்கிருந்து இங்கு அதிகம் வரமாட்டாவென்பதை உணர்ந்தே தாமங்ஙனம் பேசினாரென்றும், இப்போது உணவுப்பொருட் குறைவால் பெருங் கஷ்டமுண்டாகியிருக்கின்றதென்றும், இக்குறைவால் வருந்துஞ் சனங்கள்மீது தாமதிக அனுதாபசிந்தையுடையவராயிருக்கின்றனரென்றும், சென்ற சில வாரங்களாக அரிசிக்குறைவால் நிகழ்ந்த பெருங்கஷ்டம், ஒவ்வொருவரது மனசிலும் நமது தேசத்திற்கு வேண்டிய உணவுப்பொருட்களை நமது தேசத்திலேயே விளைவித்துக் கொள்ளுதலின் ஆவசியகத்தை நன்கு பதியச்செய்யுமென்பது தமது நம்பிக்கையென்றும், இத்தேசத்திலே அரிசிக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடிய உணவுப் பொருட்கள் விளைவிக்கப்படுகின்றனவென்றும், ஆனால் அரிசியே இத்தேசத்தின் விசேஷ உணவுப்பொருளென்றும், அஃதில்லாதவழியே சனங்கள் மற்றைய உணவுப்பொருட்களை உபயோகிக்கின்றார்களென்றும், போதிய நெல்லு இங்கு விளைவிக்கக்கூடாதிருக்கவில்லையென்றும், இந்தியாவிலே ஒரு இடத்தில் இல்லாவிட்டால் வேறோரிடத்தில் எப்போதும் பஞ்சம் நிகழ்ந்துகொண்டிருக்கின்றதென்றும், இந்தியாவுக்குக் கண்டு எஞ்சக்கூடிய அரிசி நெல்லை இங்கு அனுப்பப்படுமெனவும், இந்த வருஷத்தில் நிகழ்ந்த கஷ்டம் இனி நிகழாதென்று எங்ஙனஞ் சொல்லலாமென்றும், இனிமேல் இங்ஙனம்நிகழாதிருக்குமென நினைந்து இப்போது உணவுப்பொருட்களின் விளைவு விஷயமாக எடுத்திருக்கும் முயற்சியைக் கைகோரவிடுவது பெரும் மௌட்டிகச் செயலாகுமென்றும், நெற்செய்கையிற் கைவிட்டிருப்போர் தங்கள் செய்கையை இனி நடத்துவதற்கு இலங்கைக் கிருஷிச்சங்கத்தார் வேண்டியவுதவி செய்வார்களென்றும், அரசினரும் கிருஷி உபாத்தியாயர்களை ஆங்காங்கு அனுப்பி நல்விளைவுண்டாகத்தக்கதாகப் பயிர்ச்செய்கைநடத்தும் முறையைப்பற்றி விவசாயிகளுக்குக் கற்பித்துவருமாறு செய்வார்களென்றும், கமச்செய்கை விஷயத்தில் பழைய முறைகளைமாத்திர மனுசரித்துவராது புதிய சாஸ்திர முறைகளையும் அனுட்டிக்கவேண்டுமென்றும், சாஸ்திரமுறைப்படி கமச்செய்கை நடத்தினால் நல்ல விளைவுண்டாகுமென்றும் சொல்லிய பின் கிராமங்களில் நல்லின ஆடுமாடுகளை விருத்திசெய்யவேண்டுமென்றுங் கூறினர்.

இலங்கையிலே இலக்கைக்குப் போதிய நெல்லு விளைவிக்கப்பட வேண்டுமாயின் வன்னிப்பகுதியிலே முன் நல்விளைநிலங்களாயிருந்து இப்போது காடுமேடாய்க் கிடக்கும் நிலங்களெல்லாஞ் செய்கைக் குள்ளாக்கப்படவேண்டும். இவற்றைச் செய்கைக்குள்ளாக்குவதற்கு அரசினரே தக்க முயற்சி செய்யவேண்டும். வன்னிப்பகுதி இதுவரை குடியேறப் பெற்றுப் பயிர்ச்செய்கைக் குள்ளாக்காதிருப்பதற்குக் காரணம் அங்கு பரவிவரும் மலேரியல் சுரமேயாகும். இம் மலேறியல் சுரத்தால் சனங்கள் பிடிக்கப்படாதபடி செய்தற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்படாவிடின் வன்னிநாடு திருந்துவது முடியாததேயாகும். வன்னிநாட்டில் பயிர்ச் செய்கை நடத்தவேண்டுமாயின் அச்செய்கை நடைபெறுமிடங்களில் கூலிச்சனங்களும் மற்றையோரும் வசித்தற்கு இடங்கள் வகுக்கப்படவேண்டும். இவ்விடங்களில் நுளம்பு களில்லாதபடி சகல செடிகளும் பூண்டுகளும் அகற்றப்படவேண்டும். வீடுகளை உயரக் கட்டி நிலத்திலிருந்து ஏழெட்டடிக்குமேல் சனங்கள் உறங்கத்தக்கதாய்ச் செய்யவேண்டும். ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மருந்துச்சாலை ஏற்படுத்தப்பட வேண்டும். கமவேலை செய்பவர்கள் யாவரும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு நினைத்த நேரங்களிலெல்லாம் போய்த்திரும்புவதற்குப் புகைவண்டிப் பிரயாணத்துண்டுகள் இனமாய்க் கொடுக்கப்படவேண்டும். அரசினர் இவற்றையெல்லாஞ்செய்து வன்னிநாட்டிற் குடியேறச்செய்து அதனை விரைவிற் பயிர்ச்செய்கைக் குள்ளாக்குவார்களென்றே நினைக்கின்றோம்.

தேசாதிபதியவர்கள் ஆடுமாடுகளை விருத்திசெய்யவேண்டுமெனக் கூறுகின்றனர். ஆடுமாடுகளைவிருத்திசெய்வதற்கு அவைகள் மேய்தற்கு மேய்ச்சல் நிலங்கள் அரசினரால் ஆங்காங்கு வகுக்கப்படவேண்டும்.

அரசினரும் ஊரவர்களும் இப்பொழுது விழிப்பாயிருக்கின்றமையால் நமது தேசத்திற்கு வேண்டிய உணவுப்பொருட்கள் நமதுதேசத்திலேயே விரைவில்விளைவிக்கப்படுமென்றே நினைக்கின்றோம்.

## சமாதான உடம்படிக்கை கைச்சாத்திடப்பட்டமை.

சென்ற ஜூன்மீ ௨௮ சனிக்கிழமை ஜர்மனியர் ஒருவாறு உடன்பட்டு யுத்தநிபந்தனைகட்கு வெர்சவிஸ்நகரிற் கூடிய சங்க முன்னிலையிற் கைச்சாத்திட்டுவிட்டனரென்றசெய்தி எல்லார்க்கும் பெரும் ஆறுதலையும் ஆனந்தத்தையுங் கொடுக்கின்றது நிகழ்ந்த யுத்தம் ஆரம்பமான காலந்தொடக்கம், யுத்தசமாதான உடம்படிக்கைக்கு ஜர்மனியர் கைச்சாத்திட்டதானாகிய சென்ற ௨௮ வரையில் இங்குள்ள சகல சனங்களும் ஆவலுடனும் அச்சத்துடனுமே யிருந்தனர். வேறு எத்தனையோ யுத்தங்கள் நிகழ்ந்தபோது நம்மவர்கள் இத்துணை ஆவலுடனும் அச்சத்துடனும் காணப்பட்டிலர். திருன்ஸ்வாலில் போவர்கட்கும் ஆங்கிலருக்கு மிடையே யுத்தம் நிகழ்ந்தபோது ஆங்கில பிரசைகளாகிய நங்கட்கு இத்துணை அச்சமும் ஆத்திரமு மிருக்கவில்லை காரணம் யாதெனில், ஆங்கிலருடன் நோக்குமிடத்து, குறித்த போவர்கள் சைநிய வலிமையாலும் பொருள் வலிமையாலும் மிகவுங் குறைந்துள்ளவரா யிருந்தமையினால் நமது ஆங்கிலர் எளிதில் அவர்களைத் தோல்வியுறச் செய்துவிடுவாரென்ற எண்ணம் எங்களெல்லோரிடத்து மிருந்தது. நாமெண்ணியபடியே நடந்துவிட்டது. மேலும், அந்த யுத்தங் காரணமாக யாதேனும் பஞ்சம் எம்மைப் பீடித்து வருத்தவுமில்லை. ஆனால் நிகழ்ந்த இந்தப் பாரியயுத்தமோ முந்தியதுபோன்றதல்ல. ஏறக்குறைய நாற்பது வருடங்களாக யுத்தஆயத்தங்களெல்லாஞ்செய்து இந்த உலகத்தையெல்லாங் கட்டியாளக் கருதி அதிக ஆரத்துவங்காட்டி நின்ற ஜர்மனியரைச் ஜயித்தல் கூடுமோ என்ற ஒரு சந்தேகம எம்மவர்மாட்டு நிகழ்ந்து மனசிற்கு அச்சத்தையும் ஆத்திரத்தையும் விளைத்தது. அதுவுமன்றி இந்த யுத்தங் காரணமாகப் பொருட்களெல்லாம் வரவின்றிப் பன்மடங்கு விலையேற, அதனாலே நாமெல்லாம் பெருஞ் சங்கடமுற்று, எப்பொழுது சமாதானம் வரும்வருமென அதனை எதிர்பார்த்திருந்தேம். அங்ஙனம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தவிஷயம் நிறைவேறிவிட்டது. ஆனதால் இனிமேலாயினும் பஞ்சம் நீக்கிப் பழமைபோல் இனிதுவாழலாமென்றதே எங்கள் நம்பிக்கை. ஆயினும் பிரபஞ்சத்தின்கண் நிகழ்கின்ற எந்தக் கருமமும் அவனையன்றி யணுவு மசையாதென்றபடி திருவருட் செயலாக நிகழ்வதால் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினாராகிய எம்மால் ஒன்றாயினும் இங்ஙனம் நிகழுமெனத் தீர்க்கமாகக் கூறத்தக்கதல்ல.

## நீதிபோதம். கக.

### சோமேசர் முதுமொழி வெண்பா.

### செய்ந்நன்றியறிதல்.

பன்னு மசதிநன்றி பாட்டிக்கோவைநூல், சொன்னானே யௌவைமுன் சோமேசா-மன்னாச், 'தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக், கொள்வர் பயன் றெரிவார்.'

ப-ரை; முன்பு-முன்னாளில்; ஔவை-ஔவைப் பிராட்டியார்; பன்னும் அசதிநன்றி; பாராட்டி-(புகழ்ந்து) சொல்லப்படுபவனாகிய-அசதியென்னுங் கொடையாளன் செய்த நன்றியைப் பெரிதாக மதித்து; கோவைநூல்-அசதிக்கோவையென்னும் நூலை; சொன்னாள்-பாடினார்; சோமேசா-சோமேசரே; மன்னா-நிலையற்ற; தினைத்துணை நன்றி-தினையளவினதாகிய உபகாரத்தை; செயினும்-(பிறன் தமக்குச்) செய்தானாயினும்; பனைத்துணையா-(அதனை அவ்வளவினதாக மதியாமல்) பனையளவினதாக; கொள்வர்-மதிப்பார்; பயன் தெரிவார்-அந்நினைப்பின் பயனை அறிபவர். எ-று.

க-ரை; ஔவையார் தம்மை அன்னமிட்டு உபசரித்த அசதியென்பவன்மீது கோவை பாடி அவன் செய்த அந்நன்றியைப் பாராட்டினர். ஆதலின், பெரியோர் தமக்குப்பிறர் அற்ப நன்றி செய்யினும் அதனைப் பெரிதாகமதித்து ஒழுகுவர் என்பதாம்.

வி-ரை; கோவை-ஒருவகைப் பிரபந்தம்; அது பொருணூலிற் சொல்லப்பட்ட தலைவனுந் தலைவியும ஒழுகும் ஒழுக்கத்தைக் கூறுவது. தினை பனையென்பன சிறுமை பெருமைகளுக்குக் காட்டும் அளவைகள். அந்நினைப்பின் பயனாவது அப்படி நினைப்போர்க்கு வரும் பிரயோசனம்.

அசதி புலவர்களைப் பெரிதுஞ் சன்மானித்து வந்த ஒரு கோகுலவரசன். தெய்வப் புலமை ஔவைப்பிராட்டி தம்மை ஆதரித்த இந்த அசதியென்னும் பெருந்தகையாளன் மீது, நன்றிபாராட்டிப் பாடிய கோவை அசதிக்கோவை எனப்படும். இக்கோவையில் ஒன்பது கவிகள் மாத்திரம் இப்பொழுதுள்ளன. ஏனைய சிதைந்தன போலும். இந்நூலின் சொன்னயம் பொருணயம் முதலியன 'ஒருபானை சோற்றிற்கு ஒரு சோறே பதம்' என்பதுபோல் அகப்பட்டுள்ள அவ்வொன்பது கவிகளானும் இனிது விளக்கும். அவற்றுட் சில கவிகளை இங்கே தருகின்றோம்.

"அற்றாரைத் தாங்கிய வைவேலசதியணிவரை மேல், முற்றாமுகிழ்முலையெவ்வாறு சென்றனன் முத்தமிழ்நூல், கற்றார்பிரிவுங் கல்லாதாரிட்ட முவை கைப்பொருள்கள், அற்றாரிளமையும் போலே கொதிக்கு மருஞ்சுரமே"

"அருஞ்சஞ்சலங்கொண்டவைவேலசதி யசல்வரையின், இருஞ் சஞ்சலஞ் சொல்ல வேண்டுகொலோ வெனதன்னைமொழி, தருஞ்சஞ்சலமுந் தனிவைத்துப் போனவர் சஞ்சலமும், பெருஞ் சஞ்சலங் கொண்டு யானிருந்தே னொரு பெண்பிறந்தே"

"அறங்காட்டியகரத் தைவேலசதி யதன்சிலம்பின், நிறங்காட்டு கஞ்சத் திருவனையீர் முகநீண்டகுமிழ்ச், திறங்காட்டும் வேலுஞ் சிலையுங் கொல்யானையுந் தேருங்கொண்டு புறங்காட்டவுந் தருமோ சிலைக்காமன்றன் பூசலிலே."

## ஆனி உத்திரம்.

ஆனி உத்திரமாவது ஆனி மாசத்து வருகின்ற உத்திர நக்ஷத்திரமாகிய புண்ணிய தினம். இப்புண்ணிய தினத்திலே சிவாலயங்கடோறும் விசேட பூசை உற்சவ முதலியன நடைபெறுவது வழக்கம்.

இவ்வானி உத்திர உற்சவம் ஏனைய க்ஷேத்திரங்களினும் தரிசிக்க முத்திதருந் தலமாகிய சிதம்பரத்தின்கண்ணே யே விசிட்டமாய் நடைபெறும். என்னை யெனில், "சித்திரையிலோணமுதற் சிரான் யுத்திரமாம், சத்து தனுவாதிரையுஞ் சார்பாகும்-பத்தி வளர், மாசி தரிசன்னி மருவு சதுர்த்தசிமன்-நீசரபிடேக தினம்" என்று கூறியிருத்தலின். ஸ்ரீமத். சிவகாமசுந்தரி அம்பாள் சமேத சிதம்பர நடராசப்பெருமானுக்கு, சித்திரை மாசத்துவரும் திருவோண நக்ஷத்திரமும், ஆனி மாசத்துவரும் உத்திர நக்ஷத்திரமும், மார்கழி மாசத்து வரும் திருவாதிரை நக்ஷத்திரமும், மாசி, ஆவணி, புரட்டாதியாகிய இம் மாதங்களில் வரும் பூர்வபக்கச் சதுர்த்தசிகளும் விசிட்டதினங்களாம். இனி, தேவ மானத்தானே, தேவர்களுக்குத் தைமாசம்முதல் ஆறு மாசங்களும் பகற்காலமாகவும், ஆடி முதல் ஆறு மாசங்களும் இராக் காலமாகவும், அவற்றுள், மார்கழி மாசம் சூரியோதயத்திற்கு முன்னதாய பிராமீ முகூர்த்த மெனப்படும் பிராதக்காலமாவும், ஆனிமாசம் சூரியாஸ்தமனத்திற்கு முன்னதாகிய பிரதோஷகாலமாகவும், சித்திரைமாசம் உச்சிக்காலமாகவும், மாசிமாசம் காலசந்தியாகவும், ஆவணிமாசம் இரவு இரண்டாங்காலமாகவும், புரட்டாதிமாசம் அர்த்தயாமகாலமாகவுங் கொண்டு, இவ்வாறுவகைத் தினங்களினும் ஆறு அபிடேகங்கள் அந்நடேசப் பிரானுக்கு நடைபெறுகின்றன. பிரதோஷகாலம் சிவதரிசனத்துக்கு விசேடமென்றும், அக்காலத்திலே சிவதரிசனஞ் செய்வோர் போகமோட்சங்களையடைவரென்றும்,சிவாகமங்கள் கூறுதலினாலும், அக்காலமே சிவபிரான் திருப்பாற் கடலினின்றும் எழுந்து தேவரைத் துன்புறிய வந்த நஞ்சைச் திருவமுது செய்து தமது கண்டத்தி லடக்கி அத்தேவர்களுக்குத் திருநடனத்தைக் காட்டி யருள்புரிந்த காலமே பிரதோஷகால மாதலானும், அப்பிரதோஷகாலம் ஆனியுத்திரமே யாகலானும், மற்றைய தினங்களினும் இவ்வானியுத்திரமே விசிட்டமுடையதெனவறிக. இனி, இவ்வானி யுத்திர விழா, சிதம்பரத்தி லன்றி ஆவுடையார்கோயில் என்றழைக்கப்படுகின்ற திருப்பெருந்துறையினும் நடைபெறுகின்றது. சிதம்பரத்தில் ஸ்ரீமத். சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பர நடேசப்பெருமானுக்கு எங்ஙனம் பத்துத் தினங்களினும் திருவிழா நடைபெறுகின்றனவோ அங்ஙனமேதிருப்பெருந்துறையினும், சைவசமய குரவராகிய ஸ்ரீமாணிக்கவாசக சுவாமிகளுக்கு விசேட உற்சவமும் ரதோற்சவமும் நடைபெறுகின்றது. ஈழமண்டலத்தும் வீணாகானபுரமெனும் இவ் யாழ்ப்பாணத்தில் வண் - வைத்தீஸ்வரசுவாமி கோயிலிலே ஆனித் திருமஞ்சனபுண்ணிய தினமாகிய இந்தமாசம் ௨0-ந்தேதி வெள்ளிக்கிழமை ஸ்ரீமத். அமிர்தானந்த சுவாமிகளது விருப்பத்தின்படி கொக்குவில் வர்த்தகர் ஸ்ரீ அ. சதாசிவம்பிள்ளையவர்க ளுபயமாக ஸ்ரீமதானந்த நடராசமூர்த்திக்கு நவோத்தர சகஸ்ர மஹாசங்காபிஷேகமும் சிவகாமசுந்தரியம்பாளுக்கு நவோத்தர சத சங்காபிஷேகமும் நிகழும். இன்னும் யாழ்ப்பாணத்தினும் ஏனைய ஊர்களிலுள்ள சிவாலயங்கடோறும் விசேட அபிடேகம் உற்சவம்முதலியன நிகழும்.

## சமாச்சாரம்.

நல்லூர் சந்திரசேகரப்பிள்ளையார்கோயில்: இவ்வாலயத்தில் இன்று துவஜாரோகணமாகி வழமைபோல மகோற்சவம் விதிப்படி சிறப்புற நிகழ்கின்றது. வருகிற சனிக்கிழமை ரதோற்சவமும் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

"இந்து சாதனம்":—இம்மகுட நாமத்துடன் எமது பத்திரிகையைக் குறித்து எழுதப்பெற்ற ஒரு கடிதம் இற்றைப் பிரசுரத்தில் வெளிவருகின்றது. இக்கடிதத்தை யெழுதிய பண்டிதர் ஸ்ரீ பொன்னம்பலபிள்ளையவர்கள் நமது பத்திரிகையைப் பெரிதும் அபிமானித்துவருபவராதலினாலும், இதனோடு சம்பந்தமான விஷயங்களை நன்குணர்ந்தவராதலினாலும் அவர்கூறியிருப்பது முழுவதும் அங்கீகரிக்கத்தக்கதேயாம். சைவசமய விஷடமாக இயன்றவளவி லுழைத்து வரும் இப்பத்திரிகை காலத்திற்குக்காலம் விருத்தியெய்தி வருதற்காயவழிகளையனுசரித்து எமமை ஊக்கப்படுத்துதல் பண்டித ரவர்கள் கூறியபடி சைவசமயிகளெல்லார்க்குங் கடனாம். நிகழ்ந்த யுத்தத்தினால் எழுந்த காகிதப்பஞ்சங் காரணமாக, எத்தனையோ பத்திரிகைகள் வெளிவராதொழியவும், இந்துசாதனம் தவறின்றிக் கிரமமாக வெளிவந்தமை நமது சைவாபிமானிகட்கெல்லாம பெருமையை விளைப்பதொன்றலவா? ஆதலால் சைவாபிமானிகள் எல்லோரும் இப்பத்திரிகையைச் சன்மானித்து இது முட்டின்றி இனிது நிலவுமவண்ணம் செய்ய முன்வருவார்களாக.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி:—இக் கல்லூரியின் அரசினர் வருடாந்த பரீட்சை நிறைவேறியமையால், இன்றுதொடக்கம் கல்லூரி விடுதலை விடப்பெற்று நிகழும் ஜூலாய்மீ 14௨ ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை:—நமது நாட்டிலுள்ள பலவிடங்கடோறுஞ் சென்று சைவப் பிரசங்கங்கள் செய்வதற்கு கௌரவ (வேதனமில்லாத) உபந்நியாசகர்களாக, நல்லூர் பிரமஸ்ரீ. க. வே. கனகசபாபதி ஐயரவர்களுடனும், பண்டிதர் ஸ்ரீ. அ. மு. சோமாஸ்கந்த பிள்ளையவர்களுடனும இச்சபையார் ஒழுங்குசெய்திருக்கின்றனர். ஆதலால் அவர்களை அழைத்துத் தங்கள் கிராமங்களிற் பிரசங்கஞ்செய்விக்க விரும்புவோர் மேற்படிசபை உபகாரியதரிசியாகிய ஸ்ரீ. மு. சபாரத்தின சிங்கமவர்கள் வாயிலாக ஒழுங்கு செய்துகொள்ளலாகும்.

சுப்பிறீங்கோடு:—ஆடிமாசச் சுப்பிறீம் கோட்டு விசாரணை இங்கு நிகழும் ஜூலாய்மீ 7-௨ ஆரம்பமாகும்.

சிறுதானிய ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது: வடமாகாணத்திலிருந்து எவ்வித சிறுதானியமும் ஏற்றுமதி செய்யக்கூடாதென அரசாட்சியார் விளம்பரப்படுத்தியிருக்கின்றனர்.

யுத்த சமாதானக் கொண்டாட்டம்:—யாழ்ப்பாணத்திலே யுத்த சமாதானக் கொண்டாட்டம் நடத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்கு யாழ்ப்பாணம் கச்சேரியில இச்சஜூலைமீ எ௨ ஓர் பிரசித்த கூட்டம் நடத்தப்படும்.

யாழ்ப்பாணம் சரஸ்வதிவிலாச சபை:—இச்சபையார் வருகிற சனிக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளியிலுள்ள 'றிஜ்வே' மண்டபத்தில் 'வேதான உலகம்' என்னும் நாடகத்தை நடாத்த நிச்சயித்திருக்கிறார்கள்.

யாழ்ப்பாணம் லோக்கல்போட்:—யாழ்ப்பாணம் லோக்கல்போட்செகிறிற்றெறியாயிருந்து வேலையினின்றும் நிறுத்தப்பட்ட டெஸ்லனின் வேலை யென்பவரினிடத்தில் கொழும்பு நகரசங்கத்தில் ஓர் உத்தியோகத்தமர்ந்திருக்கும் மெஸ் சொலமன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒரு தோணி மோசம்போனமை:—சில நாட்களின் முன் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்குச் சுருட்டு முதலிய பொருட்களேற்றிச் சென்ற "சிந்தாமணி" என்னுந் தோணி கற்குடாவுக் கணித்தாயுள்ள பாறையில் மோதுண்டு உடைந்து ஆழிவாய்ப்பட்டதென அறிகின்றேம்.

மதுக் கடைகளை நீக்க முயலுதல்:—றெவெறெண்ட் திறிமாவர்களும், றெவெறெண்ட் மேதரவர்களும், றெவெறெண்ட் பிக்கலவர்களும், கத்தோலிக்கருரு மெஸ் பிறுன்ஸ் அவர்களும், மெஸ் J. H. வன்னியசிங்கமவர்களும், ஸ்ரீ ஆ. கனகரத்தினமவர்களும், ஸ்ரீ கெவின்ஸ் செல்லத்துரைப்பிள்ளையவர்களும், ஸ்ரீ கா. அருணம்பலமவர்களும், ஸ்ரீ K. கனகசபையவர்களும் கச்சேரிக்குச்சென்று யாழ்ப்பாணம் ஏசன்றர் மெஸ் கொன்ஸ்தன்தயினவர்களைச் சந்தித்து ஊரவர்களின் விருப்பத்தின்படி மதுக்கடைகளை நீக்குவதைக் குறித்துப் பேசியபோது ஏசன்றரவர்கள் மதுபரிபாலன சப்பிறின்றனவர்களுடன் ஆலோசனைசெய்து மதுக்கடைகளை நீக்குவதற்குச் சம்மதிகொடுப்பதற்கு அம்மதுக்கடைகளிருக்குமிடத்திற்றனே ஓர் வசதியான இடம் குறிக்கப்படுமென்றும், தலைவரிப்பணம் கொடுப்பவர்களின் பேர்களடங்கிய இடாப்பைப் பார்ப்பதற்கு இடங்கொடுக்கப்படுமென்றும், தங்கள் தலைவரிப் பணத் துண்டுகளை இழந்தவர்களுக்குப் பிரதித் துண்டுகள் துண்டொன்று 5 சதவீதம் கொடுக்கப்படுமென்றும். லோக்கல்போட் எல்லைக்குப் பாலுள்ள தவறணைகளுக்கு எல்லை குறிப்பதைப் பற்றி ஆலோசனை செய்யப்படுமென்றும் சொல்லினர்.

மரணம்:—மானிப்பாய் ஸ்ரீ. எஸ் கே. லொட்டனவர்களின் புத்திரன் ஸ்ரீ. கனரத்தினமவர்கள் சென்ற 21ௗ தேகவியோகமாகிவிட்டனர். இவர் தமது தந்தையாரைப் போல பிரதிமைப்படங்கவெடுப்பதில் அதிநிபுணர் வயோதிப தசையில் தமது அருமைப்புதல்வனையிழந்து துயர் கடலுளாழ்ந்திருக்குமிவரது தந்தையரோடும் ஏனைய சுற்றமித்திரருடனும் நாமுமனுதாபப்படுகின்றேம்.

சட்டநிருபண சபை:—இலங்கைச் சட்டநிருபண சபைக் கூட்டமொன்று இந்த ஜூலைமீ க-ௗ கௌசபை மண்டபத்தில் நடைபெறும்.

மட்டக்களப்புக் கச்சேரி:—மட்டக்களப்புக் கச்சேரித் தலைமைக் கிளாக் ஸ்ரீ. S. R. முத்துக்குமாரு அவர்கள் மட்டக்களப்புக் கச்சேரி உப உதவி ஏசன்றராகவும் வேலை பார்க்கும்படி நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

ஓர் றப்பர் யந்திரசாலை தீக்கிரையானது:—களுத்துறையில் சென்ற 15ௗ ஓர் றப்பர் யந்திரசாலையில் தீப்பற்றி முழுக்கட்டடமு மெரிந்து போனது. இத் தீவிபத்தாலுண்டாகிய நஷ்டம் ஏறக்குறைய 80000 ரூபாவரையிலிருக்குமாம்.

உப்புச் செய்கை:—இலங்கையிலே உப்புச் செய்கையில் திருத்தங்கள் செய்வதற்கு இந்தியாவிலிருந்து மெஸ் கூச் என்பவர் அழைக்கப்படுவர். இவர் இந்தியாவிலே அரசாட்சியாரின் கீழ் ஓர் உப்புச்செய்கை உத்தியோகஸ்தராக வேலை பார்த்து அதிக அனுபவம் படைத்தவராம்.

கிருஷிச் சங்கம்:—இலங்கைக் கிருஷிச் சங்கத்தாரின் கூட்டமொன்று சென்ற ஜூன் மீ அ-ௗ மாத்துறை டிஸ்திறிக் கோட்டு வீட்டில் நடைபெற்றது. அப்போது இலங்கைக் கிருஷித் தலைவர் மெஸ் தொக்டேலவர்கள் அக்கிராசனத் தமர்ந்திருந்தனர். இக் கூட்டத்திலே உணவுப் பொருள் விஷயமே அதிகமாகக் கவனிக்கப்பட்டது.

பசியின் கொடுமையால் தற்கொலை செய்தது:—உருகொடவத்தை என்னுமிடத்தில் ஜீவித்துவந்த கூ-வயதுடைய ராஜசூரியசார்ளிபேர்ஞன்டோ என்பவன் கழுத்திறுகயிறிட்டுத் தூங்கி இறந்துவிட்டான். மூன்று நாட்களாகச் சாப்பாடின்றிப் பட்டினியாயிருந்தனனென்று அவனது மனைவி கூறினள். கொர்னல் விளக்கத்திலும் பட்டினியினிமித்தம் தற்கொலை புரிந்தானென்று தீர்ப்புச்செய்யப்பட்டதாம்.

சட்டநிருபணசபைத் தமிழ்ப்பிரதிநிதி உத்தியோகம்:—இலங்கைச் சட்டநிருபணசபைத் தமிழ்ப்பிரதிநிதிகளிலொருவராகும் கௌரவஸ்ரீ. பாலசிங்கமவர்களின் உத்தியோக காலவெல்லை வருகிற டிசெம்பர் மாசத்தோடுமுடிவாகின்றமையால அவ்விடத்திற்கு அவரையே திரும்பவும் நியமிக்கும்படி தேசாதிபதியவர்களுக்கு மனுப்பண்ணுவதற்கு மட்டக்களப்பிலே ஓர் கூட்டம் இந்த மாசத்தில் நடைபெறுமெனத் தெரியவருகின்றது.

சேனைச்செய்கை:—சேனைச் செய்கை நடத்துவதற்கு ஆதாவது காடுவெட்டி சிறுதானியங்களும் காய்கறிகளும் செய்கை பண்ணுவதற்கு அனுராசபுரத்தில் கூஅ-ஏக்கர் நிலமும் குருநாகலில் அ௦-ஏக்கர் நிலமும் கொடுக்க அரசாட்சியார் ஒழுங்கு செய்திருக்கின்றனர். ஏசன்றர்மார் அல்லது உதவி ஏசன்றர்மார் தங்கள் மாகாணங்களில் அல்லது டிஸ்திறிக்குகளில் சேனை செய்யக்கூடிய நிலங்களைப் பிடித்து சேனைசெய்வதற்கு ஒப்பந்தத்தில் அல்லது குத்தகையில் அவரவர்களுக்குக்கொடுப்பதற்கு அவர்களுக்குத் தத்துவமளிக்கப் பட்டிருக்கிறது.

கீழ்நாட்டுப் பயிர்ச்செய்கைச் சங்கத்தாரும் சிங்களக் கூலிச்சனங்களும்:—கீழ்நாட்டுப் பயிர்ச்செய்கைச் சங்க அங்கத்தவர்கள் சிலர் நம் தேசாதிபதியவர்களைச் சந்தித்து, இந்தியகூலிச்சனங்களுக்குப் போல தோட்டங்களில் வேலை செய்யும் சிங்களக் கூலிச்சனங்களுக்கும் அரிசி கொடுக்கவேண்டுமெனக் கேட்டபோது, தோட்டங்களில்வேலைசெய்து தங்கள் சம்பளத்திலோர் பாகமாக அரிசி வாங்கிவந்த சிங்கள வேலைக்காரருக்கு, இந்திய கூலிச்சனங்களுக்கு எங்ஙனம் அரிசி கொடுக்கப்படுகின்றதோ அங்ஙனமே அவர்களுக்கும் அரிசி கொடுப்பதற்குத் தாமொழுங்கு செய்வாரெனச் சொல்லியபின் இந்தியாவில் விளைவு குறைந்தமையே இப்பொழுதுள்ள நிலைமைக்குக் காரணமென்றும், சேனைச்செய்கையை அதிகப்படுத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறதென்றும் இந்தியாவில் வருகிற வருடத்திலும் விளைவு குன்றுமாயி னதிகக்கஷ்டமுண்டாகுமென்றுஞ்சொலலினர்.

சீயம் அரிசி:—சீயத்திலிருந்து ஜூலைமீ 12-ம் திகதிக்குப்பின் விசேஷ உத்தரவின்றி அரிசி செல ஏற்றமதி செய்யக்கூடாதென சீயம் இராசாங்கத்தார் கட்டளையிட்டிருக்கின்றார்களாம்.

சீன ஜப்பானியர் கலகம்:—சிங்கப்பூரிலே சீனருக்கும் ஜப்பானியருக்குமிடையில் பெரிய கலகமுண்டாகி அநேக சாப்புகள் நாசமாக்கப்பட்டன. கடல் இராணுவமும் தரையிராணுவமுமழைக்கப்பட்டபின்பே கலகமமர்ந்தது. இக்கலகத்தில் மூன்றுகலகக்காரர் கொல்லப்பட்டனர் பொலிஸ் இராணுவத் தலைவருடன் பல பொலீசர் காயமடைந்தனர்.

இந்தியாவில் ஓர் பெரும்புகைரதவிபத்து:—இந்தியாவிலே டெல்ஹியிலிருந்து வாகூருக்குப் போன ஒரு புகைரதவண்டி வேறோர் வண்டியோடு மோதுண்டபோது 35 இந்தியபிரயாணிகள் மரணமடைய, 43 பேர் காயமடைந்தனர். இவர்களையன்றி 2 புகைரத உத்தியோகஸ்தர் மாணமடைந்தனரென்றும் 3 ஐரோப்பிய பிரயாணிகள் காயமடைந்தனரென்றுஞ் சொல்லப்படுகின்றது.

ஓர் பெரிய ஆகாய விமானம்:—போர்ச்சைத்தியரிலே ஓர் கம்பனியார் ஓர் பெரும் ஆகாய விமான மியற்றுகின்றார்களாம். இது உலகத்திலுள்ள ஆகாய விமானங்களெல்லாவற்றிலும் மிகப் பெரியதாகுமாம். இதில் மூன்று யந்திரங்களமைக்கப்படும். ஒவ்வொரு யந்திரமும் 350 குதிரைகளின் பெலனுடையதா யிருக்குமாம். இது ஒரு மணித்தியாலத்தில் ௭௦ கட்டைக்குப் பறக்கக் கூடியதா யிருக்குமாம்.

## கடிதம்.

### இந்துசாதனம்.

இவ்விலங்கையிலே சென்ற முப்பது வருடங்களாக நின்று நிலவும் சைவசமயப் பத்திரிகை இந்த இந்து சாதன மொன்றுமேயாம்.

(தாயுமான சுவாமிகள் பாடல்).

"இயல்பொன்றுந் திரியாம வியமமாதி
யெண்குணமுங் காட்டியன்பா லின்பமாகிப்
பயனருளப் பொருள்களெல்லா வாரமாகிப்
பண்புறவுஞ் சௌபான பகுதிகாட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதிடாதி
மற்றங்க நூல்வணங்க மௌனமோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராஜாங்கத்தி
லமர்ந்ததுவை திகசைவ மழகிதந்தோ.

"அந்தோவீ ததிசயவிச் சமயம்போலின்
றறிஞரெல்லா நடுவறிய வணிமாவாதி
வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
வைத்திருந்த மாதவர்க்கு மற்றுமற்றும்
இந்திராதி போகநலம் பெற்றபேர்க்கு
மிதுவன்றித் தாயகம்வே றில்லையில்லை
சந்தான கற்பகம்போ லருளைக்காட்டத்
தக்கநெறி யிந்நெறியே தான்சன்மார்க்கம்."

இப்பத்திரிகையால் நமது சமய விஷயமாக நாம் எய்திய நன்மைகள் அளப்பில. லௌகிக விருத்திகளில் நாம் எய்தியநன்மைகள் அளப்பில. எத்திற நன்மைகளையும் நாம் இப்பத்திரிகையினுல் எய்தினேமென்று சத்தியமாகச் சொல்லலாம். இத்துணைப் பெருஞ் சிறப்பினை யுடைய இப்பத்திரிகைக்கு நமது சைவசமயிகள் யாவரும் தங்கள் தங்களாலியன்ற உதவி புரிதல்வேண்டும். கைபொப்ப கேயர்களாய் வருதலினாலும், கடிதமெழுதும் அபிமானிகளாய் வருதலினாலும் நமது சைவசமயிகள் இவ்வுத்தம பத்திரிகைக்கு வேண்டிய உதவிகள் புரியலாம். இப்பத்திரிகைக்கு உதவி புரிவோர் புண்ணியமும் புகழும் தப்பாது பெறுவர். இப்பத்திரிகையைத்தொடங்கி நடத்திவரும் மகிமைபொருந்தியசைவபரிபாலனசபையாருக்கும் இப்பத்திரிகையின் ஆசிரியர்களுக்கும் இப்பத்திரிகைக்குக் கடிதமெழுதும் அபிமானிகளுக்கும் சைவசமயிகள் யாவரும் நாழ்தோறும் வாழ்த்துக்கூறக் கடவராவர்.

இந்த இந்துசாதனப் பத்திரிகை நமது சைவசமயிகளின் ஞானபானுவாக என்றும் நின்று நிலவுதற்குப் பரமகருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்,
மூளாய்: சு. பொன்னம்பலபிள்ளை.

### "கல்வி."

உலகத்திலே மனிதராய்ப் பிறந்தோர் தேடற்பாலனவாகிய செல்வங்கள் இரண்டுள. அவை கல்விச் செல்வம் பொருட் செல்வம் எனப்படும். அவற்றுட் சிறந்தது கல்விச்செல்வம். பொருட் செல்வம் தாயத்தார், கள்வர், அரசர் முதலியோரினால் அபகரிக்கப்படும்; வெள்ளம், தீ முதலியவற்றால் அழியும். கல்விச்செல்வமோ அங்ஙனமன்று. அதுபற்றியே பெருநாவலரும்,

"கேடில்விழுச்செல்வங் கல்வியொருவற்கு
மாடல்லமற்றையவை."

எனக்கூறியுள்ளார். பொருட்செல்வம் இம்மையிலேயே ஒருவருக்கு இன்பத்தைக் கொடுக்கும். கல்வியோ எழுபிறப்பினுஞ் சென்று ஒருவர்க்கு இன்பத்தைக் கொடுக்கும். அதுபற்றியே திருக்குறளிலும்,

"ஒருமைக்கட்டான் கற்றகல்வியொருவற்
கெழுமையுமேமாப்புடைத்து"

எனக்கூறப்பட்டிருக்கின்றது.

கல்வியினாலே செல்வப்பொருளையுந் தேடுதல் கூடுமாதலின கல்வியே ஒருவருக்குச் சிறந்த செல்வமாகும். பொருட் செல்வம் எவ்விதத்தினும் ஒருகாலத்தில் அழியுந்தன்மையுடையது. கல்விச்செல்வமோ எக்காலத்தும் அழியாது பெருகுந்தன்மை யுடையது. இக் கருத்தடங்கவே ஔவைப்பிராட்டியாரும் "கைப் பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி" எனக்கூறினர். கல்வி, இம்மையிலே அறம் பொரு ளின்பம் என்னும் மூன்றையுந்தந்து மறுமையிலே முத்தியின்பத்தையுந் தரவல்லது. செல்வமுடைய ஒருவர்க்கு அவர் பிறந்தநாட்டில் மாத்திரம் மதிப்புண்டு. கல்வியுடைய ஒருவர்க்குப் பிறந்தநாட்டில் மாத்திரமன்று சென்ற சென்ற நாடெங்கும் அவர்க்குக் கீர்த்தியுண்டு. அதனையுணர்த்துமாறே தமிழ்மறையிலும்,

"யாதானுநாடாமாலூராமலென்னொருவன்
சாந்துணையுங்கல்லாதவாறு"

எனக்கூறப்பட்டிருக்கின்றது. ஒருவர் கவலையுற்றபொழுது கல்வியே அவரைக் கைகொடுத்துக் காக்கின்றது. ஆதலின் சிற்றறிவுடைய உயிர்களுக்குக் கல்வியினுஞ்சிறந்த செல்வம் பிறிதொன்றில்லை; அதனையறிவுறுத்தற்பொருட்டே

"அறம்பொருளின்பமும்வீடும்பயக்கும்
புறங்கடைநல்லிசையுங்காட்டும்-உறுங்கவலொன்
றுற்றுழியுங்கைகொடுக்குங்கல்வியினூங்கில்லைச்
சிற்றுயிர்க்குற்றதுணை" என ஆன்றோர்கூறினர்.

ஒருவருக்கு முகத்திலே கண்களிருந்து மேடு, பள்ளம், கல், முள் முதலிய கெட்டவழிகளை விலக்கி நல்லவழியிற்செலுத்துவதுபோல, கல்வி ஒருவருக்கு அகத்திலே கண்ணாயிருந்து தீயவழிகளாகிய மேடு பள்ளங்களிற் செல்லவிடாது நல்லவழியிற் செலுத்துகின்றது. கண்களுக்குக் காணுகின்ற வல்லமையிருந்தும் சூரியன் சந்திரன் விளக்கொளிமுதலிய ஒளிகளின்றி அவைகாணமாட்டா. அது போலவே ஆன்மாக்களுக்கு அறிவிருந்தும் கல்வியறிவின்றி அவையொன்றுமறியமாட்டா. அதனை நன்குணர்த்தவே தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும் கல்லாத மக்களை விலங்கோடொப்பிட்டு,

"விலங்கொடுமக்களனையரிலங்குநூல்
கற்றாரோடேனையவர்"

எனத்திருவாய்மலர்ந்தருளினர்.

செல்வம் ஒருவருக்கு இம்மையிலே நிலைபேறில்லாத இன்பத்தையே கொடுக்கவல்லது கல்வியோவெனின் அங்ஙனமன்று, இம்மையிலே இன்பத்தையுங் கீர்த்தியையுந் தந்து மறுமையிலும் என்றுமழியாப் பேரின்பமாகிய வீட்டின்பத்தையுந் தரவல்லது. அதிக செல்வமுடையோரும் கல்வி என்னும் கண் அறிவைப்பெறாராயின் நன்குமதிக்கப்படமாட்டார்கள் கடைதொடழியாது அவர்களின் வதனங்களிற்றோன்றும் கண்களெல்லாம் புண்களாகவே மதிக்கப்படும். அதனையுறுத்தவே நாயனாரும்,

"கண்ணுடையரென்பவர்கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்" எனச் சொல்லியிருக்கின்றார்.

பெரும்பாலும் செல்வமுடையோரே கல்வியையத்தியாவசியகமாகக் கற்றிருக்கவேண்டும். ஏனெனின், செல்வமுடையோர் கல்லாரவராயின் தாமபெற்ற செல்வத்தைத் தீயவழிகளிற் செலவிட்டுத் தம் செல்வத்திருவடைபத்தக்க புகழையுமிழந்து புண்ணியத்தையுமிழந்து பாவத்தையே தேடிக்கொள்ளுவார்கள். செல்வமுடையோர் கற்றவராயின் தம்செல்வத்தை நல்லவழிகளிற் செலவிட்டுத் தருமங்கள்செய்து மேலான கீர்த்தியையும் புண்ணியத்தையுந் தேடிக்கொள்ளுவார்கள். ஆகலால் செல்வர்க்கும் வறிஞர்க்கும் கல்வியே விசிட்டமுடைய கண்ணாயிருக்கின்றது. அதனை விளக்குமாறே முதற்பாவலரும்,

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்
விரண்டுங், கண்ணென்பவாழுமுயிர்க்கு"

எனப்புகன்றார்.

ஒருவர்க்கு எத்துணைப் பெருஞ்செல்வமிருப்பினும், எவ்விதமாய் தேக அழகிருப்பினும், எவ்விதமாய உயர்குலத்தை யுடையவராயிருப்பினும் அவர் கல்வி என்னுங் கண்ணழகைப் பெறாராயின், மேற் கூறிப்போந்தவற்றால் அவருக்கு அதிக கீர்த்தி ஏற்படமாட்டாது. செல்வமில்லாதோராயினும், இழிகுலத்தவராயினும், அழகில்லாதவராயினும் கல்வி என்னுங் கண்ணழகையுடையவராயின் அவருக்கு மேற்கூறிய செல்வங்கள் நிறையப்பெற்றவரினும் பார்க்க மேலாய புகழேற்படும். அதுபற்றியே

"குஞ்சியழகுங்கொடுந்தானைக்கோட்டழகும்
மஞ்சளழகுமழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாமென்னும்நடுவுநிலைமையாற்
கல்வியழகேயழகு"

எனப் பெரியோர் கூறியுள்ளார். (வரும்)

இங்ஙனம்,
க. சரவணமுத்து,
நவாலி வடக்கு.

### 'பிரபஞ்ச விசாரம்.'

கலைவல்லீர்!

மேற்காட்டிய தலைப்பற்றிக் கத்தோலிக்குக்குருவாகிய, ஞானப்பிரகாசருக்கும், இந்து சாதனக்கடிதர் ஒருவருக்கும் தருக்கம் நிகழும்போது, சென்ற 24-ம் இலக்கப் பாதுகாவலனில், "பழசகுடி" என்னுங் கைச்சாத்தோடு ஒருவர் தோன்றி, காற்றுக்கெதிரே நின்று காறி உமிழ்வார்போல, ஆக்ஷேபங்களுக்கு விடையிறுக்காது தனதுவாயில்வந்தபடி கொட்டியளந்திருக்கிறார். அன்னோர்வாக்கி லசப்பியமொழி யுதிக்குமா? ஒருசந்திப்பாளையை யுடைகிறவருக்குத் தெரியுமா? இத்தகையோரது இழிமொழிக்கஞ்சிக் கடிதர் எடுத்த விஷயத்தைத் தளர்வுறுத்துவாரா? அவர் பிரகாசரோடு சம்பாஷிப்பதேயன்றி, கண்டோர் எள்ளி நகையாடத்தக்க அசப்பிய மொழிகளுக்கு ஒருபோதுஞ் செவிசாய்க்க மாட்டார்.

"பேதையரைக்கண்டாற்பெரியோர்வழிவிலகி
நீதியொடுபோதனெறியன்றோ—காதமத
மாகரத்துயானைவழிவிலகும்புன்மலந்தின்
சூகரத்துக்கஞ்சியோசொல்." என்றும்,

"கூர்த்துநாய்கவ்விக்கொளக்கண்டுந்தம்வாயாற்
பேர்த்துநாய்கவ்வினரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள்கீழாயசொல்லியக்காற்சொல்லுபவோ
மேன்மக்கள் தம்வாயால்மீட்டு."

என்றுங் கூறப்பட்ட ஆப்த வாக்கியங்களைக் கடைப்பிடித்து உபரதியடைவர்.

தங்கள் குருவாகிய பிரகாசருக்காகப் பரிந்து பேசுவதற்கு, உயர்குலக் கத்தோலிக்கத் தமிழ்ப்பண்டிதர்கள் எத்தனையோபேரிருக்கவும், 'அயிற்குலுவால்' அதிஷ்டிக்கப்பட்ட சன்னுகம் பழங்குடி வெளிப்பட்டது விசனிக்கற்பாலதே!

ஓர் மத்தியஸ்தன்.

### ஓடர் நயிசி.

அட்டனில் வைக்கப்படும் நுவரேலியா டிஸ்திறிக் கோட்டில்.

நெ. 61.

அட்டனில் மரணசாதனமின்றிக் காலஞ்சென்றுபோன கணபதிப்பிள்ளை கந்தப்பர் கணபதிப்பிள்ளையினுடைய பூதலைப்பற்றிய காரியம்.

சம்கானா க. க. கணபதிப்பிள்ளையின் கைம்பெண் சுந்தரம்

விண்ணப்பக்காரி.

1. அரியரத்தினம்மாள், 2. தங்கரத்தினம்,
3. செல்லரத்தினம், 4. தவமணி,
5. நவநீதம், 6. ராசமணி,
7. மேற்படி பேர்வழிகளுடைய கார்ட்டியன் கந்தப்பர் ஜேமிஸ் அய்யாத்துரை, 8. ஆனைக்கோட்டையிலிருக்கும் நாகமுத்து நன்னிதம்பி உத்தரவாதிகள்.

அட்டன் நுவரேலியா டிஸ்திறிக்கோர்ட்டின் நீதிவானாகிய கனம் எச். எ பேர்ட்டன் துரையவர்கள் முன்பாக 1919-ம் ஞு ஆனிமீ 13ௗ இந்தக் காரியம் கொண்டுவரப்பட்டு விண்ணப்பக் காரியின் பெருக்கோராகிய மெஸ் ஹட்சன் தம்பிராசா அவர்களின் மூலமாகவில் குறித்த விண்ணப்பக்காரியுடைய 1919-ம் ஞு வைகாசிமீ 30ௗ இடப்பட்ட சத்தியப்பத்திரம் வாசிக்கப்பட்டு பின் வருமாறு தீர்மானிக்கப்பட்டது: அதாவது 1919-ம் ஞு ஆடிமீ 11-ந் திகதிக்கு அல்லது அதற்குமுன் மேற்சொல்லிய உத்தரவாதிகளான 1. அரியரத்தினம்மாள், 2. தங்கரத்தினம், 3 செல்லரத்தினம், 4. தவமணி, 5. நவநீதம், 6 ராசமணி, 7. மேற்குறித்த மைனர்களுடைய கார்டியன் கந்தப்பர் ஜேமிஸ் அய்யாத்துரை, 8 நாகமுத்து நன்னிதம்பி முதலியோர்களாவது, இதற்குச் சம்பந்தப்பட்டவர் வேறே யாராகிலு மிருப்பாராகில் அவர்களாவது, இக்கோர்ட்டுக்கு மேற்குறித்த காரணத்துக் கெதிரிடையான காரணங் காட்டாவிட்டால் குறித்த கணபதிப்பிள்ளை கந்தப்பர் கணபதிப்பிள்ளையுடைய பூர்வதத்துவம் அவருடைய கைம்பெண்ணாகிய சுந்தரம் என்னும் விண்ணப்பக்காரிக்கு உரிததாகிவிடுமென்பதே.

ஒப்பமிடப்பட்டது. எச். எ. பேர்டன்,
டிஸ்திறிக் நீதிவான்.

1919-ம் ஞு ஆனிமீ 13ௗ.

### பாழ்நிலங்களின் கட்டளைச்சட்டத்தைப்பற்றிய அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணியில் எவ்வித உடந்தையாயினுந் தங்களுக்குண்டென உரித்துப் பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள்,1919-ம் ஆண்டு ஆனி(ஜூன்)மீ 20ௗ துவக்கம் மூன்று மாசத்திரகள், 1897-ம்,1899-ம், 1900-ம்,1903-ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28-ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேட உத்தியோகஸ்தர் ஜே. எம். டேவிஸ் துரையவர்களிடம் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும், எழுத்துமூலமாயேனும் தங்களுக்குண்டெனும் உரித்தை அல்லது உடந்தையைத் தெரிவியாவிடில் சொல்லிய விசேஷ உத்தியோகஸ்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக்கொண்டு உரித்துப் பேசப்படாததாகிய சொல்லிய காணியை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

கவனிப்பு:—இக்காணிக வெளத்திலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

ஜே எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகஸ்தர்.

சுட்டிய காணியின் விபரம்.

வடமாகாணம் மன்னார் முல்லைத்தீவு டிஸ்திறிக்குகள் வவோனியா வடக்கைச்சேர்ந்த உடையார்ப் பிரிவிலும் கருனவல்பற்று தெற்குப் பிரிவிலும் மாங்குலயைச் சேர்ந்த பன்னகாமப்பிரிவிலும் புதுக்குளம், மாலகுளம்,மன்னுகுளம், கனகராயன்குளம், புதுவிளாங்குளம், குருக்கள்குளம், புதூர், கல்ஒழுங்கன், புளியங்குளம், பணிக்கன்குளம், வன்னிவிளாங்குளம், விவரித்தபடியே 27, 109 ஏக்கர் 2றூட் 34பேட்ச் விசாலமுடையதும் 5,071-ம் பிரதம படத்தில் 1-ம் காணித் துண்டாய்க் காட்டப்படுவதும் சாமானியமாய் வன்னிவிளாங்குளச் காட்டுச் சேமிப்பு (பாதைகளும் பாலிஆறு முழுவதும் உட்பட) என்னும் பெயரினால் அறியப்பட்டு அல்லது அழைக்கப்பட்டு வருவதுமான காணித்துண்டு, இதற்கெல்லைகளாவன:—வடக்கு-முடிக்குரியகாடு; கிழக்கு-யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப்போகும் றெயில்றோட்டு; தெற்கு முடிக்குரியகாடு; மேற்கு-முடிக்குரியகாடு.

கவனிப்பு:—மேற்குறிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டனவாகியகீழ்க்குறிக்கும் காணித்துண்டுகள் இவ்வறிவித்தலின்று விலக்கப்பட்டிருக்கின்றதென்பதையும், அவைகளின் விசாலத்தொகையாகும் 2,402 ஏக்கர் 2 றூட் 26 பேட்ச் மேற்குறிக்கப்பட்ட 27,109 ஏக்கர் 2 றூட் 34 பேட்ச்க்கு அடங்கவில்லை யென்பதையுங் கவனிக்க வேண்டியது.

பிரதமபடம் 5,071.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ.றூ.பே. |
|---|---|---|
| A | மதவுவைத்தகுளத்துக்காகவும் மாங்குளத்துக்காகவும் புறப்படுத்தப்பட்டநிலம் | 545 0 37 |
| B | மன்னுகுளத்துக்காக புறப்படுத்தப்பட்டநிலம் | 394 0 17 |
| C | புதுவிளாங்குளத்துக்காகப் புறப்படுத்தப்பட்டநிலம் | 698 0 32 |
| D | புதூருக்காகப் புறப்படுத்தப் பட்டநிலம் | 538 3 32 |
| E | குருக்கள் குளத்துக்காகப் புறப்படுத்தப்பட்டநிலம் | 226 0 28 |
| | | 2,402 2 26 |

[முல்லைத்தீவு வி. உ. 1—1919]
அறிவித்தல் இல. 7260.

## விளம்பரம்.

### அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட அஷ்டபந்தன மருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கின்றது.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

---

### வாடகைக்கிருக்கும் கிட்டங்கி.

வண்-மேற்கு பெரியகடைத்தெருவில் மூர்வைதயினுன் வயல் என்னுங் காணியிற் கட்டப்பெற்றிருக்குங் கிட்டங்கியில் கடைவைக்கவும் குடியிருக்கவும் தக்கதான கட்டடமும் கிணறும் இரண்டு செக்குகளாடத்தக்க உட்கொல்லை நிலமும் வாடகைக்குக்கொடுக்கவிருக்கிறது. தேவையானவர்கள் என்னிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,
சித. மு ப. சிதம்பரநாதச்செட்டி.

---

இனும்! வி. பீ. சார்ஜ் இனும்!

### பம்பாய் இமிடேஷன் பட்டுப் புடைவை.



பார்வைக்கு வெகு சோத்தியாயும் அழகாயும் நாணயமாயும்இருக்கும். இதில் பலவித கலர்களில் பலவித பூக்கள் போட்ட தரம் உண்டு. தற்காலத்துக்குத்தகுந்தசேலை. பிரபுக்களும் ஏழைகளும் உடுத்தக்கூடியது. ஓர் முறை வரவழைக்க உண்மை விளங்கும்.

8 கஜம் 7-8-0. 9 கஜம் 8½ ரூபா.

வி. சரஸ்வதிபாய் அண்டு கம்பெனி,
10, வைத்தியநாதமுதலி தெரு,
சௌகார்பேட்டை,மதிராஸ்.

---

## ஜவுளி விளம்பரம்.

M. R. PERUMALIER,
MANUFACTURER OF SWADESI CLOTHS,
West Tower Street, Madura,
(S. INDIA.)

எமது தொழிற் சாலையில் தற்கால நாகரீகத்திற்கு ஏற்ற விதமாக அநேக நூதன தினுசுகள் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகையிலும், சாதாவிலும், வேஸ்டிகள், சால்வைகள், சவுக்கங்களும், இன்னும் பலவித இங்கிலீஸ் கலர்களில், ஜரிகைச்சேலை, சாதா சேலை, தாவணி மதுரை சுன்னடி புடவை, சித்தாடை, ரவிக்கை வகையராக்கள், ஜரிகையிலும், சாதாவிலும் தயார் செய்துவைத்தும், காசி (பெனாரிஸ்), பம்பாய், பூனா, சூரத், கல்கத்தா, காஸ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, கெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களில் தயாராகும் பட்டுச் சேலை, பளுக்காச்சேலை வகையரா சகலதினுசுகளும் மொத்தத்தில் ஏராளமாய் வரவழைத்துவைத்து வியாபாரிகளுக்கும் மற்றும் சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும் மொத்தமாகவும் சில்லரையிலும் சகாய விலைக்கு நேரில் கொடுத்தும் தபால் மூலமாய் வரும் கடிதங்களுக்கு போஸ்டு பார்சலாக சரக்கு அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

(1) திருப்தி யில்லாத சரக்குகளை திரும்பப் பெற்றுக்கொண்டு வேறுகோரும் சரக்கை மாற்றிக் கொடுக்க முடியும்.

(2) சகல ஆடரும் வி. பி. மூலமாக சரக்கு அனுப்பப்படும்.

(3) சிங்கப்பூர் பினங்கு மலாக்கா முதலிய (S S) ஸ்ட்ரெயிட் செட்டில் மெண்டு நாடுகளுக்கும் வி. பி. யிலும் அனுப்பக்கூடும்.

(4) கோலாலம்பூர் சிலாங்கூர் முதலிய (F M S) பெடரேட்டெட் மலாய் நாடுகளுக்கும் தென்ஆபிரிக்கா மோரிஸ் முதலிய வெளிநாடுகளுக்கும் வி. பி. சட்டம் இல்லாததினால் போஸ்டல் ஆர்டர் மூலமாகவாவது மணியார்டர் மூலமாகவாவது பணம் அனுப்பவேண்டும். பணம் வந்த பிறகு சரக்கு அனுப்பப்படும்.

(5) முற்பணம்அனுப்ப சவுகரியப்படாதவர்கள் சிங்கப்பூர், பினங்கு, மலாக்கா முதலிய (S S)ஐச் சேர்ந்த போஸ்மாஸ்டர்கள்பேருக்கு பார்சல்களை அனுப்பும்படி எழுதினால் அனுப்புவோம். அவ்விடம் வந்து பணங்கட்டி பார்சல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இது மிகவும் சவுகரியமான ஏற்பாடு. அல்லது பாங்க் (Bank) மூலமாய் சரக்கு அனுப்பும்படி எழுதினாலும் அனுப்புவோம். உடனே பணத்தைக் கட்டி பார்சல்களைப் பெற்றுக் கொள்ளாத பக்ஷத்தில் சகலசெலவும் அவர்களைப் பொறுத்ததாகும்.

N. P. (a) ஜவுளி விலை விபரமடங்கிய காட்லாக் வேண்டுவோர் எமக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம்.

(b) எல்லா ஆடர்களும் எம்முடைய மேர்பார்வையின் பேரில் அனுப்புவோம்.

தங்கள் ஆர்டரை எதிர் பார்க்கும்

மு. ரா. பெருமாள் ஐயர்,
சுதேச ஜவுளி வியாபாரம்,
மேலைக் கோபுரவீதி,
மதுரை. இந்தியா).

---

## விளம்பரம்.

தேவாலயங்களுக்கு உபயோகமான திறம் பட்டுக்குடைகள், ஆலவட்டம், கொடி, சுருட்டி, ஜாலர், மகரதோரணம், காவடிசகலாத்து, முதலானவைகள் இந்தியாவில் சித்திரவேலைக்காறர்களால் செய்யப்பட்டு நமது சாப்பில் சகாயமான கிரயத்திற்கு கொடுக்க விருக்கின்றன. இன்னும் அவர் அவர்கள் கேட்கும் ஓடர்களுக்குத் தக்கமாதிரித் தயாரித்துக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

மு. நாகலிங்கப்பிள்ளை
பறங்கித் தெரு,
யாழ்ப்பாணம்.

---

### வியாபாரச் சமுதாயம்.

இச்சமுதாயத்தின் வண்ணார்பண்ணை இரண்டாம்இலக்கப் புடைவைக்கடைக்கு ஆவணி மீ 1உ தொடக்கமாக ஒரு மானேசர் தேவை. போதிய பிணை கொடுக்கவேண்டியது

வேண்டிய விபரங்களை மேற்படி சமுதாயத்தின் தலைவரிடங் கேட்டறியலாம்.

---

## பிரபஞ்சவிசாரம்.

பிரபஞ்சஉற்பத்தியைக்குறித்து
உலோகாயதம், சாங்கியம், மீமாஞ்சம்,
பௌத்தம், மாயாவாதம்
முதலிய பூர்வக் கொள்கைகளையும்;
பௌதிகவாதம், பிரயோசனவாதம்,
சந்தேகவாதம், பரமாணுவாதம்,
பரிணாமவாதம், கிறீஸ்தவவாதம்
முதலிய நவீனக்கொள்கைகளையும்
தர்க்கமுறையாக ஆராய்ந்துகண்டித்து
சைவசித்தாந்த உண்மையைநாடி
யாழ்ப்பாணம்
ச. சபாரத்தினமுதலியாரால்
செய்யப்பட்டதோர் சிறந்த நூல்
உ௱ பக்கங்கொண்டது
விலை ரூபா. க. சதம். ௫0.

வேண்டுவோர் நூலாசிரியரிடத்தும் சென்னபட்டினம் மயிலாப்பூர் ம ௱ ௱. ஸ்ரீ சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளைஅவர்களிடத்தும் பெற்றுக்கொள்க.

---

## ஜவுளி விளம்பரம்.

சுதேச ஜவுளிகள் விலைசகாயமாய்க் கிடைக்குமிடம் எது?

### மதுரை எம். ஆர். வெங்கடாசலநாயுடு அண்டு சன்ஸ்

ஜவுளி கம்பெனியில் வாங்கலாம்.

நமது கம்பெனியில் தற்கால நாகரீகத்துக்குத் தக்கவாறு உள்ளூரில் புதுமாதிரியாகத் தயாராகும் 100, 150, 200-ம் நம்பர் நூலில் ஜரிகை வேஷ்டி ஜோடிகள், சால்வைகள், சவுக்கங்கள், பலவித இங்கிலீஷ் கலரில் ஜரிகைச் சேலைகள், சாதா டோரியா சுன்னடிச்சேலைகள் வகையராக்களும், சித்தாடை ரவிக்கைத்தினிசுகளும், காசி, பம்பாய், கல்கத்தா, புனா, சூரத், காஷ்மீர், காக்கிநாடு, காஞ்சிபுரம், கொர்நாடு, கும்பகோணம், கோயம்புத்தூர், பெங்களூர், சென்னபட்டணம், ஆரணி, சேலம், தஞ்சாவூர், திருச்சி, கெல்லூர், உப்பாடை, துயிலி, மலையாளம் முதலிய இடங்களிலிருந்து ஜவுளிகள் வரவழைக்கப்பட்டு ஸ்டொக்கில் வைத்துக்கொண்டு சொற்ப லாபத்திற்கு வியாபாரிகளுக்கும், சொந்தப் பாவிப்புக் காரர்களுக்கும், தேவையான தினிசுகளை விரும்பிக் கேட்கும்வண்ணம் நேரில் வருபவர்களுக்கும், பிறதேசவாசிகள் வி. பி.போஸ்ற்மூலமாக அனுப்பும்படி எழுதுவோர்களுக்கும் அனுப்பிக்கொண்டு வருகிறோம.

தவிரவும், எங்கள் கம்பெனியில் பட்டுநாணயத்திற்கும், ஜரிகைக்கும் உத்தரவாதமா யிருப்பதால், பிறதேசவாசிகள் நம்பிக்கையாக ஏராளமான ஜவுளிகளுக்கு ஆடர்கொடுத்துவருகிறார்கள். ஒருமுறை உண்மையைச் சோதிப்பதற்காக எங்கள் விலைவிபர ஜாப்தா (Catalogue) வரவழைத்துச் சிறு ஆடர் கொடுத்து ஜவுளிகளின் சகாயத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

N. B. சிங்கப்பூர், பினங்கு என்னுமிடங்களுக்கும் வி. பி மூலமாகவும், மற்றும் வி. பி, சட்டமில்லாத F. M. S. என்னும் பெடரேற். மலாய், தென் ஆபிரிக்கா முதலிய தொடுவாய் இராச்சியப்பகுதிகளுக்கு ஆடருடன் முற்பணம் அல்லது போஸ்டல் ஆடர் அனுப்பவேண்டும். அல்லது பாங்கு மூலமாக அனுப்பவுங்கூடும்.

தமது ஆடரை எதிர்பார்க்கும்

எம். ஆர். வெங்கடாசலநாயுடு அண்டு சன்ஸ்.,
நாகரீக ஜவுளி கம்பெனி,
மேலைக்கோபுரவாசல்,
மதுரை.

M. R. V. NAIDU & SONS,
High Class Cloth Bazaar,
West Tower, Madura.

---

விசேஷ வியாபாரம்! சொந்த நெசவு!!

தந்தி விலாசம்:— முரஹரி, மதுரை.

## விளம்பரம்.

### M. R. Kasturi Aiyer Son of M. K. Ramier,

SWADESHI DHANALAKSHMI CLOTH STORE.
AMMAN SANNADHI STREET, MADURA. (SOUTH INDIA.)

இதனல் சகலமான நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது:

எங்கள் முன்னோர்களால் நடத்திவந்த ஜவுளி வியாபாரத்தைச் சுமார் 12 வருஷகாலமாக எங்கள் பிதா "மு. க. ராமையர் அண்டு சன்ஸ்" என்னும் விலாசம் வைத்து நாங்கள் அநேகம் நெசவு சாலைகள் ஏற்படுத்தி நூதனமாய் ஏராளமான தினுசுகள் உற்பத்தி செய்து உள்ளூரிலும் வெளியூரிலும் பிரதானமாயுள்ள ஜலபபிறதேசங்களிலும் இருக்கும் வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் மற்றை யாவருக்கும் வியாபாரத்துக்காகவும் சொந்தப் பாவிப்புககாகவும் விசேஷமாய் ஜவுளிகள் கொடுத்து பெரிய ஜவுளிவியாபாரஞ்செய்துகொண்டிருந்தோம்.

தற்சமையம் நாங்கள் டை மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் மேல் கோபுரவாசல் தெருவிலும், கீழ்வெளி வீதியிலும் நடத்திக்கொண்டுவந்த நெசவு ஜவுளி வியாபாரத்தை நிறுத்தி யெங்களால் மேற்படி நெசவுசாலைகளில் கைதேர்ந்த நெசவுகாரர்களையும் இன்னும் அநேக புது நெசவு காரர்களையும் சேர்த்து உள்ளூரிலும் இந்தியாவிலுள்ள அநேகர்களிலும் ஏராளமாய் புது நெசவு சாலைகள் ஏற்படுத்தி தற்கால நாகரீகத்துக்கு தகுந்த மாதிரியாயும நாளுக்கு நாள் நூதனமான புது மாதிரி தினுசுகள் உற்பத்திசெய்தும விலைகள் மிகவும் சகாயமும் விசேஷ லாபத்தைக் கருதாமல் சுதேச நன்மையை முன்னிட்டும் வியாபாரம் விருத்திசெய்துகொண்டு வருகிறோம்.

முக்கியமாய்நாங்கள் மேற்படி மு. க. ராமய்யர் அண்டு சன்ஸ் விலாசத்திலிருந்து சுமார் 7 வருஷகாலமாக முக்கிய பட்டணங்களையும் பிரதானமான ஜலப்பிரதேசங்களையும அநேகம் தடவை நாங்கள் நேரில் போய் பார்வையிட்டு அவ்விடங்களிலிருக்கும் சுதேச சிமான்களும் சிமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் மற்றும் சாதாரணமா புன்னவர்களும் சாதாரணமாய் பாவிக்கக்கூடியதும் விசேஷகாலங்களில் பாவிக்கக்கூடிய மாதிரியான தினுசுகளும் ஒவ்வொருஊர்களிலும் அப்போதைக்கப்போது உண்டாகும் நாகரீகத்தையும் பார்வையிட்டு ஒவ்வொருவர்கள் மனதிற்கும் திருப்திகரமான தினுசுகள் அனுப்பிக்கொண்டும் வியாபாரிகளுக்கு ஒவ்வொரு மாதங்களில் விசேஷமாய் விற்கக்கூடிய தினுசுகள் அனுப்பிக்கொண்டும் எல்லோருடைய மனத்திற்கும் சந்தோஷமாகும்படி விசேஷவியாபாரம் செய்துகொண்டுவந்த நாங்கள் தற்சமயம் மதுரை அம்மன் சந்நிதித் தெருவில் ஜவுளிக்கடை யேற்படுத்தி ஏராளமான தினுசுகள் வைத்துக்கொண்டு ஒவ்வொருநாளும் அயலூர்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும் மற்றுமுள்ள யாவர்களுக்கும் தேவையான தினுசுகள் அந்த அந்த தேசங்களுக்கு பிடித்த மாதிரி ஜவுளிகள்ஏராளமாய் அனுப்பிக்கொண்டு வருகிறோம்.

ஆகையால் ஒவ்வொரு தேசங்களிலிருக்கும சிமான்களும் சிமாட்டிகளும் பிரபுக்களும் உத்தியோகஸ்தர்களும் கிராணியார் கங்காணிமேமேக்கர் கண்டக்டர்களும் அவரவர்களுக்கு சொந்தப் பாவிப்புக்கும் வேலையாட்களுக்கும வேண்டிய மாதிரி ஜவுளிகளுக்கு எங்கள் கம்பேனிக்கு ஆர்டர் கொடுக்கவேணுமாய் நாங்கள் மிகவும் கேட்டுக்கொள்ளுகிறபடியால் தாங்கள் கட்டாய மெங்கள் கம்பேனிக்கு ஆர்டர் தந்து நாங்கள் அனுப்பும் சாமான்கள் தங்கள் தங்கள் மனத்திற்கு சந்தோஷமாயிருப்பதைக்கண்டு ஒவ்வொருவரும் மேன்மேலும் எங்கள் வியாபாரத்தை விருத்தி செய்துகொண்டு வரவேண்டுமென்று மிகவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

(முக்கிய கவனிப்பு) எங்கள் கம்பேனிக் கேட்லாக வேண்டியவர்கள் விலாசம் தெரிவித்தால் இனமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். சரக்குகள் தபால் பார்சலாகவும் ரயில் பார்சலாகவும் கப்பல் மார்க்கமாயும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. இல்லாத ஊர்களுக்கு (பாங்க்) மூலியமாய் அனுப்பப்படும். பாங்க் இல்லாத ஊர்களிலிருக்கின்றவர்கள் பாங்க் போஸ்ட் ஆர்டர் முற்பணம் அனுப்பவேண்டும், அல்லது சமீபத்தில பாங்க் இருக்கும் ஊர்களின் பெயரும் பாங்கின் விலாசமும் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொருவரும் அனுப்பும் தபால் முதலியவைகளில் அவரவர்கள் முழுவிலாசத்தை தமிழ் அல்லது இங்கிலீஷில் தெளிவாய் எழுதி அனுப்பவேண்டும்.

சிங்கப்பூர் பினங்கு மலாய்தொடுவாய்ப் பகுதிகளுக்கும் சிலோனுக்கும் இங்கிலீஷ் தமிழ் தெரிந்த ஏஜண்டுகள் தேவை.

Tele: Address:—
"MURAHARI" MADURA.

தங்கள் அன்புள்ள,
மு. ரா. கஸ்தூரி அய்யர்,
சொந்த நெசவு ஜவுளி வியாபாரி,
அம்மன் சந்நிதிதெரு, மதுரை தென் இந்தியா.

---

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

**1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.**

இது கெர்ப்பஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்பஉற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா க.

**2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.**

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ.

**3 பிரமேக வியாதிக்குச் சத்துச்செந்தூரம்.**

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினல் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

**4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.**

சரீரத்தின்எந்தஇடத்திலும் ஓடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகண்டபம். அத்துகிதீவத்திற குணமாகும்.

௬௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

**5. மேகசஞ்சீவிச் சூரணம்.**

மேகரோகமுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். உஉ நாள் மருந்து ரூ உ.

**6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.**

அன்னத்துவேஷம், பித்தக்கிறகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

**7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்**

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும்.

உஉ நாள் மருந்து ரூ உ.

**8. மூலிகை ரத்தினத் தைலம்.**

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

**9. பரிமள பற்பொடி.**

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கழக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 0 க்கு ரூ 2-12-0.

**10. படர்மேக சங்காரி வெண்ணெய்.**

மேகரோகத்தால் தேகத்தில்விழும் எவ்வித வத்துப் படைகளையும் 3 வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ச. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

**தவறாதீர்கள்! இதுசமையம்!! தவறாதீர்கள்!!!**

### உங்களுடைய அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வகுத்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன இன்ன துக்கங்கள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கஷ்டம் கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்திலும் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முனனு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனா, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம் இட்டுமா, ௰. தான் எப்போது கீர்த்தியாகும, ௧௧. வியாபாரம ஜெயமாகுமா, ௧௨. விவேகத்தைக் கிரம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.

முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.

௧௨ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜு முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்டில் அனுப்புவோம்.

விபரம்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினால் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனமாக அனுப்புவோம.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்,

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

☞ Printed and published by S. T. M. P. Sithambaranatha Chettiar, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.